
# திராவிடத்தால் வாழ்கிறோம்

816

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

60

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# சித்தூர் நமதே – முழங்கிய தி.மு.கழகம்!

'ஆந்திர மாநில சித்தூர் மாவட்ட மாநாடு' 1954 ஜூலை 10, 11-ஆம் தேதிகளில் பொதட்டூர்ப்பேட்டையில் நடைபெற்றது. மதராஸ் மாகாணத்தில் இருந்து மொழிவழி மாநிலமாக ஆந்திரா பிரிந்த பிறகு நடைபெற்ற மாநாடு இது. தமிழர்கள் அதிகம் வாழும் சித்தூரை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டுமென்று வலியுறுத்தல்கள் எழுந்த காலம். மாநாட்டுப் பந்தலுக்குப் பொட்டி ஸ்ரீராமுலுவின் பெயரும், அரங்குக்கு நடராசன் பெயரும் சூட்டப்பட்டிருந்தது. ஜி.கஸ்தூரியின் இசை நிகழ்ச்சியோடு முதல் நாள் சமூக சீர்திருத்த மாநாடு தொடங்கியது. நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி மாநாட்டைத் தொடங்கிவைக்க, அ.பொன்னம் பலனார் தலைமை வகித்தார்.

என்.வி.நடராசன், பூங்கோதை, வி.முனி சாமி, கே.ஏ.மதியழகன், ஆர்.எஸ். பாண்டியன், சி.பி.சிற்றரசு, சத்தியவாணி முத்து, சி.வி.எம்.அண்ணாமலை, அருண்மொழி, நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் முதல் நாள் உரையாற்றினர். எம்.ஜி.ஆரின் 'இன்பக்கனவு' நாடகத்துடன் முதல்நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாவது நாளும் ஜி.கஸ்தூரியின் இசை நிகழ்ச்சியோடு மாநாடு தொடங்கியது.

ஓவியம் : சிகரன்




மாநாட்டை இராம. அரங்கண்ணல் தொடங்கி வைக்க, ஏ.எல்.சி.கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார். தொண்டர்களின் அணிவகுப்பு சிறப்பாக நடைபெற்றது. சித்தூரில் கழகக் கொடி ஏற்றப்பட்டது. இரண்டாவது நாள் அரசியல் மாநாடு இரண்டு முக்கிய நோக்கங் களைக் கொண்டிருந்தது. ஆந்திராவிலுள்ள தமிழ்ப் பகுதிகளைச் சேர்த்தல் வேண்டும், ஆந்திரப் பகுதியில் உள்ள தமிழர்களிடையேயும் ஆந்திரர்களிடையேயும் சகோதர உணர்வை வளர்ப்பதும், திராவிட நாடு கொள்கையை விளக்குவதும் நோக்கங்களாக இருந்தன.

மாநாட்டில் பேசிய பேரறிஞர் அண்ணா, "தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியும் ஆந்திர கம்யூனிஸ்ட் கட்சியும் அமர்ந்து பேசினால், சித்தூர் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கம்யூனிஸ்ட் நண்பர்கள் சொல்கிறார்கள். ஆனால், நாம் சொல்கிறோம், சித்தூர் தமிழர் பிரச்சினையானாலும் சரி, நாஞ்சில் தமிழர் பிரச்சினையானாலும் சரி, புதுவைப் பிரச்சினையானாலும் சரி, இலங்கை வாழ் திராவிடர் பிரச்சினையானாலும் சரி, இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண டெல்லியின் ஆதிக்கம் ஒழிய வேண்டும். ஆந்திரம் உருவான நேரத்தில், தில்லி ஏகாதி பத்தியம் நியாயமாக நடந்து கொண்டிருந்தால், இந்தப் பிரச்சினை எழுந்தே இருக்காதே!" என்று கேள்வி எழுப்பினார்.

இருமாநில மக்கள் மனங்களில் குரோத உணர்ச்சி எழாத வண்ணம், இரு மாநில முதல்வர்களும் சந்தித்துப் பேச வேண்டும், டெல்லி சர்க்கார் வாக்குறுதி அளித்தபடி பிரச்சினையைத் தீர்க்க எல்லை கமிசனை அனுப்பி வைக்க வேண்டும், இனத்தால் ஒன்று பட்ட தமிழ்-ஆந்திர மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்திடும் சூழ்ச்சிதான் சித்தூர் ஆந்திராவுடன் இணைக்கப்பட்டது, அதற்காக டெல்லி அரசைக் கண்டிக்கிறோம் உட்பட முக்கிய தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

மேலும், சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதி கள் அனைத்தும் தமிழ்நாட்டோடு சேர்க்கப்படு தல் வேண்டும் என்பதற்காகவும், அதற்கு ஆவன செய்யவும் திருச்சி பொதுக்குழுவில் என்.வி. நடராசன் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவை இம்மாநாடு முழு மனத்தோடு வரவேற்பதுடன், அத்திட்டம் வெற்றிபெற, சித்தூர் மாவட்டத்திலுள்ள கிளைக்கழகங்கள் அனைத்தும் தீவிர பணியில் ஈடுபடவும் தயாராயிருக்கிறது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**...கூட்டம் திரளும்**

## உண்மைக்கு அஞ்சும் கோழைகள்!




சமூக சீர்திருத்தவாதிகள் ஜோதிராவ் புலே மற்றும் சாவித்திரிபாய் புலே வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள திரைப்படம் புலே. இந்தத் திரைப்படத்தை ஏப்ரல் 11-ஆம் தேதி வெளியிட திட்டமிட்டிருந்தது படக்குழு. இந்த நிலையில், திரைப்படத் தணிக்கை வாரியம், படத்தின் பல காட்சிகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து உரையாடல்களை நீக்க வலியுறுத்தியுள்ளது. இதனால், திரைப்படம் ஏப்ரல் 25-ஆம் தேதிக்குத் திரையிட தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

படத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒடுக்கப்பட்டார்கள், 'மஹர், மாங், பேஷ்வா என சாதிப் பெயர்களை குறிப்பிடக்கூடாது, மூன்றாயிரம் ஆண்டுகள் அடிமைத்தனம் என்றெல்லாம் குறிப்பிடக்கூடாது' எனப் பல இடங்களில் உரையாடல்களை நீக்கச் சொல்லி வலியுறுத்தி இருக்கிறார்கள். படத்தின், முன்னோட்டக் காட்சிகளில் பார்ப்பன ஒடுக்குமுறைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், திரைப்பட வாரியத்தின் இந்தப் போக்கு குறித்து இயக்குநர் அனுராக் காஷ்யப் "இந்த சாதிய, இன வெறி அரசாங்கம் கண்ணாடியில் தங்கள் முகத்தைப் பார்க்க வெட்கப்படுகிறது" என்று விமர்சனம் செய்துள்ளார்.

"எது அவர்களைத் தொந்தரவு செய்கிறது என்பதை வெளிப்படையாகச் சொல்ல முடியாத கோழைகள்" என்று குறிப்பிட்டுள்ள அவர், "முன்பு தாடக்- 2 படத்துக்குப் பிரச்சினை செய்து, இந்தியாவில் சாதி அமைப்பை மோடி ஒழித்து விட்டார் என்று கூறினார்கள், இங்கே சாதி அமைப்பு இல்லை என்றால், ஏன் பிராமணர்கள் புலே திரைப்படத்தின் மீது கோபம் கொள்கிறார்கள்? சாதி அமைப்பு இல்லை என்றால், ஏன் ஜோதிராவ் புலே சாவித்திரிபாய் புலே இன்னும் பேசுபொருளாக இருக்கிறார்கள்?" என்று கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்த விமர்சனத்துக்காக அனுராக் கடுமையாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளார். அவரது மகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சக ஊழியர்களுக்குப் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை மிரட்டல்கள் தொடுக்கப்பட்டுள்ளன. உண்மையை எதிர்கொள்ளமுடியாத அரசு, மதவெறி கும்பல்களுக்கு எதிராகவும் அனுராக் காஷ்யப் மற்றும் புலே திரைப்படத்துக்கு ஆதரவாகவும் சமூக வலைதளங்களில் பெருகும் ஆதரவு நம்பிக்கை அளிக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### மிசா காலத்தில் கழக உறுதி!



கா.கு.இலக்கியன்

மீஞ்சூர் ஒன்றியத்தில் என் தந்தை காட்டாவூர் குப்புசாமி என்றால், பகுதியில் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். இயக்கத்தின் மீதும் கலைஞர் மீதும் தன் இறுதிக்காலம் வரை, மாறா பற்றுடன் இயக்கத்தில் பயணித்தவர். நெருக்கடி காலத்தில் தங்கள் பகுதியில் உள்ள கழகத் தோழர்களுடன் கலைஞர், நாவலர் மற்றும் பேராசிரியர் அவர்களைச் சந்தித்து, மிசா வழக்கு நிதி வழங்கி, தங்களுடைய கழக உறுதியை தெரிவித்தனர்.

**– கா.கு.இலக்கியன், பேரூராட்சி மன்ற உறுப்பினர், நாரவாரிக்குப்பம், செங்குன்றம், திருவள்ளூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

60

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# மீண்டும் எழும் வரலாறு!

சரியாக 51 ஆண்டுகளுக்கு முன்னர், ஏப்ரல் 16 அன்று மைய-மாநில உறவுகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட 'ராஜமன்னார் குழு' அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் குறித்த நீண்ட நெடிய உரையை நிகழ்த்தினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்தத் தீர்மானம் மீதான விவாதம், ஏப்ரல் 20 அன்று முடிவுக்கு வந்தது, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. 1983-ஆம் ஆண்டு முதல் இந்த தினம் 'மாநில சுயாட்சிக் கோரிக்கை நாளாகவும்' நம் தி.மு. கழகத்தால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் கழகத் தலைவர் அவர்கள் சட்டப்பேரவையில், 'மாநில சுயாட்சிக்கான உயர் மட்டக் குழுவை' உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப்; ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி எம். அசோக் வர்தன் ஷெட்டி; மற்றும் மாநில திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் எம். நாகநாதன் ஆகியோரைக் கொண்டு அமைத்து அறிவிப்பு




வெளியிட்டார். இந்த வரலாற்றுத் தருணத்தில், மீண்டும் மாநில சுயாட்சி குறித்து, சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரையை நினைவுகூர்வது அவசியமாகிறது.

மாநில சுயாட்சித் தீர்மானத்தின் மீது உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து 20-04-1974-இல் சட்டப் பேரவையிலும். 28-04-1974-இல் சட்டமன்ற மேலவையிலும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பதிலுரைகள் தொகுக்கப்பெற்று 'மாநில சுயாட்சி' என்ற தலைப்பில், 'தமிழரசு' இதழின் இலவச இணைப்பாக 16-05-1974 அன்று வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் படித்துப் பாதுகாக்க வேண்டிய கருத்துக் கருவூலமாக வெளியாகி இருக்கும் இந்நூல், தமிழ் மின்னூலகத்தில் படிக்கக் கிடைக்கிறது.

பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய ஒன்றியத்தின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்புகொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உரு வாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் பேரவையில் முன்மொழியப் பட்டது மாநில சுயாட்சித் தீர்மானம்.

சட்டப்பேரவையில் இடம் பெற்ற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் விவாதத்தில் பங்கேற்று தங்களுடைய கருத்துக் களைப் பகிர்ந்து கொண்டனர். இதன் முத்தாய்ப்பாக, அ.தி.மு.க. துணைத் தலைவர் ஜி.ஆர்.எட்மண்ட் "ராஜமன்னார் கமிட்டி அறிக்கை எதற்கும் பயன்படாத ஒன்று! யாரும் படிக்கத் தகுதியற்றது. அந்த அறிக்கை யைக் குப்பைக் கூடையிலே போட வேண்டும். மாநில சுயாட்சியை எங்கள் கட்சி ஏற்றுக் கொள்ளாது" என உரக்கப் பேசினார்.

இந்த விவாதங்களுக்கு கலைஞர் வழங்கிய பதிலுரை உண்மையிலேயே உணர்வுப்பூர்வ மானதாக இருந்தது. "என்னுடைய வாழ்க்கை யிலே, பொது வாழ்க்கையிலே மிக முக்கியமான ஒரு கடமையை நான் முடித்திருப்பதாகக் கருதுகின்றேன். ஆகவே இந்தக் கடமைக்குப் பிறகு - இந்தக் கடமையை நிறைவேற்ற -இந்தப் பதவியைக் கூடத் தூக்கி எறிந்துவிட்டு, நானும் சிறை செல்ல தயாராகவே இருக்கிறேன்'''என்று கூறி அமர்ந்தார். அத்தகைய சிறப்பு மிகுந்த இவ்வுரை கழகத் தோழர்கள் அனைவராலும் அவசியம் வாசிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

**...வாசிப்போம்.**

## கழகம் ஒரு கருவூலம்

### சிகிச்சைக்கான செலவு!

1968-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவுக்கு தமிழ்நாட்டிலும், அமெரிக்காவிலும் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான செலவினங்களை அரசு ஏற்பது தவறில்லை என்கிற வாதங்களை, அண்ணா ஏற்றுக் கொள்ளவில்லை. கழகத்தின் சார்பில் நிதி வசூலித்து, அதனை அரசுக்குச் செலுத்திவிட வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார். அதனை நிறைவேற்றும் வகையில், கழகத்தின் சார்பில் நிதி வசூலிக்கப்பட்டு அண்ணாவின் சிகிச்சைக்கான தொகை ஒரு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து ஐநூற்றி ஐம்பத்து இரண்டு ரூபாய் தொண்ணூற்று ஐந்து காசுகள் தலைமைக் கழகத்தின் சார்பில் அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.